ந.க.எண். 66/2022/அ1

கன்னியாகுமரி பேரூராட்சி அலுவலகம்
கன்னியாகுமரி
நாள் : **23.06.2022**

## BOV வாகனங்கள் கொள்முதல்

கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சியில் 2021–2022 கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் (KNMT) கீழ் கன்னியாகுமரி பேரூராட்சியில் கீழ்க்காணும் வாகனங்கள் விநியோகம் செய்வதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளி முறையில் (1.தொழில்நுட்ப தகுதி உறை, 2. விலை விகிதம் குறித்த ஒப்பந்த நமுனா வைக்கும் உறை) ஒப்பந்தப்புள்ளிகள் இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண். 66/2022/அ1 நாள் 23.06.2022ன் படி வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | வாகனத்தின் விவரம் | ஒப்பந்த மதிப்பு (ரூ. லட்சத்தில்) | வைப்புத்தொகை 1%.(ரூ.) | ஒப்பந்த நமுனா ரூ | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | BOV with Lithium Battery (13 Number) | 25.662 | 25662 | 9360 | 30 நாட்கள் |

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி படிவம் இறக்கம் செய்தல் / பெற்றுக் கொள்ளுதல் | 27.06.2022 முதல் |
| 2 | ஒப்பந்த நமுனா வழங்கப்படும் கடைசி நாள் | 12.07.2022 காலை 11.00 மணி வரை |
| 3 | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 12.07.2022 பிற்பகல் 3.00 மணி வரை |
| 4 | தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி சரிபார்த்தல் | 13.07.2022 பிற்பகல் 3.30 மணி |
| 5 | விலை ஒப்பந்தப்புள்ளி திறத்தல் | 14.07.2022 பிற்பகல் 3.30 மணி |

<u>நிபந்தனைகள்:</u>

1. **BOV** வாகனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் நிறுவனம் **Lithium Battery operated vehicle** தயாரிப்பு அல்லது விநியோகஸ்தராக மூன்று ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். (சான்று இணைக்கப்பட வேண்டும்)
2. மேற்படி நிறுவனங்களின் வருடாந்திர பண பரிவர்த்தனை (Annual Turnover) கடந்த மூன்று நிதி ஆண்டுகளுக்கு ரூ. 50.00 இலட்சத்துக்கு மேல் இருக்க வேண்டும். அதற்கான audited சான்று இணைக்கப்பட வேண்டும்.
3. நிறுவனத்தின் விபரம் மற்றும் தொழில்நுட்ப தகுதி குறித்து கேட்கப்பட்ட விபரம் குறித்த படிவம் – I பூர்த்தி செய்து இணைக்கப்பட வேண்டும். (அதில் கேட்கப்பட்டுள்ள விபரங்களுக்கான ஆதாரங்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்)
4. சரக்கு மற்றும் சேவை வரி பதிவு எண் குறித்த சான்று இணைக்கப்பட வேண்டும்
5. கடந்த மூன்று ஆண்டுகள் சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் வருமான வரி செலுத்திய விபரம் இணைக்கப்பட வேண்டும்.
6. வைப்புத்தொகை “Executive Officer, Kanniyakumari Special Grade Town Panchayat” என்ற முகவரியில் வங்கி வரைவோலை மூலம் செலுத்தப்பட வேண்டும். இவ்வைப்புத்தொகை தொழில்நுட்ப தகுதிக்கான உறையில் வைக்கப்பட வேண்டும்.
7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வ.எண். 1 முதல் 7 வரையான விபரங்கள் தனியாக தொழில்நுட்ப தகுதி உறையில் வைக்கப்பட வேண்டும். மேற்படி உறையின் மேல் விநியோகம் செய்ய உள்ள வாகனத்தின் விபரம் (BOV) தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
8. ஒப்பந்த நமுனா அலுவலக நேரத்தில் 12.07.2022காலை 11.00 மணி வரை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் http://tenders.tn.gov.in, http://tntenders.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

9. விலை விகிதம் குறித்த ஒப்பந்த நமுனா தனி உறையில் வைத்து உறையின் மேல் BOV க்கான Price Bid என தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
10. பூர்த்தி செய்யப்பட்ட தொழில்நுட்ப தகுதிக்கான உறை மற்றும் Price Bid ற்கான உறை ஆகிய இரண்டையும் சேர்த்து ஒரே உறையில் வைத்து உறையின் மேல் BOV க்கான டெண்டர் என குறிப்பிட்டு டெண்டர் நாளில் சமர்ப்பிக்க வேண்டும்.
11. ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டு தொழில்நுட்ப தகுதி பெற்ற நிறுவனத்தின் (Price bid) மட்டும் திறக்கப்பட்டு குறைந்த நிரக்கில் ஒப்பந்தப்புள்ளி சமர்பித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மேற்படி வாகனங்கள் கொள்முதல் செய்ய அமைக்கப்பட்ட குழு நிர்ணயித்த தொகைக்கு மிகாமல் இருப்பின் மன்ற அங்கீகாரம் பெற்றும் வேலை உத்தரவு வழங்கப்படும்.
12. வேலை உத்தரவு வழங்கப்பட்டதும், கூடுதல் 1% வைப்புத்தொகை செலுத்தப்பட வேண்டும்
13. வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மேற்படி வாகன பதிவிற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் வேலை உத்தரவு வழங்கப்படும் நிறுவனத்தால் வாகனம் விநியோகம் செய்யப்படும்போது மேற்கொள்ளப்பட வேண்டும்.
14. கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்களுக்கு பட்டியல் தொகை வழங்கப்படும்போது, GST, IT மற்றும் இதர பிடித்தங்கள் பிடித்தம் செய்து தொகை வழங்கப்படும்.
15. உரிய காலத்திற்குள் வாகனங்கள் விநியோகம் செய்ய தவறினால் செலுத்துப்பட்டுள்ள வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து ஈடு செய்யப்படும்.
16. வாகனங்கள் விநியோகம் செய்யப்பட்டு ஓராண்டு காலத்திற்குள் வாகனத்தில் ஏற்படும் குறைபாடுகளை சம்பந்தப்பட்ட நிறுவனத்தினரே தமது சொந்த செலவில் சரி செய்ய வேண்டும்.
17. முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் வைப்புத்தொகை இன்றி சமர்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.
18. செலுத்தப்படும் வைப்புத்தொகை தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கையில் தடை ஏதும் இல்லை எனில் திரும்ப வழங்கப்படும்.
19. ஒப்பந்த தியதியினை மாற்றி வைக்கவோ ரத்து செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
20. இதர நிபந்தனைகள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

23/6/2022

செயல் அலுவலர்,
கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சி